<u>பிரதமர் இன்று தூத்துக்குடி வருகை</u>

# மன்னார் வளைகுடா பகுதி முழுவதும் ட்ரோன்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது

## கடலோர பாதுகாப்பு குழும டி.ஐ.ஜி. பேட்டி

திருச்செந்துார்,ஜூலை.26

பிரதமர் தூத்துக்குடி வருகையை முன்னிட்டு மன்னார் வளைகுடா பகுதி முழுவதும் ட்ரோன்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று தமிழக கடலோர பாதுகாப்பு குழும டிஐஜி மகேஷ் குமார் தெரிவித்தார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் 452 கோடி மதிப்பில் விரிவாக்கப்பட்ட கட்டடத்தை பிரதமர் மோடி நாளை 26 ஆம் தேதி நாளை இரவு 8:30-க்கு திறக்க உள்ளார்.

இதனை முன்னிட்டு விமான நிலையம் மற்றும் சுற்றுப்பகுதிகள் அதனை சுற்றி உள்ள கிராமங்களில் பாதுகாப்பிற்காக போலீசார் நிறுத்தப்பட்டுள்ளனர். பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு பிரிவு ஏடிஜிபி சுரேஷ் தலைமையில் 20 பேர் கொண்ட குழுவினர் தூத்துக்குடியில் கடந்த மூன்று நாட்களாக முகாமிட்டுள்ளனர்.

மேலும், தமிழக கடலோர பாதுகாப்பு குழும டிஐஜி மகேஷ் குமார் தலைமையில் ஏடிஎஸ்பி சிவசங்கரன், டிஎஸ்பி ராஜன், இன்ஸ்பெக்டர் பேச்சு முத்து மற்றும் போலீசார் கடற்கரை மற்றும் கடலோரப் பகுதிகளை கண்காணித்து வருகின்றனர். கடற்கரை கிராமங்களில் முகாமிட்டு வெளியாள்கள் நடமாட்டத்தை கண்காணிக்கின்றனர்.

இதனைத்தொடர்ந்து, தமிழக கடலோர பாதுகாப்பு குழும டிஐஜி மகேஷ் குமார் விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.. அப்போது அவர் கூறுகையில், மன்னார் வளைகுடா பகுதியில் ட்ரோன் மூலம் கண்காணிப்பு நடைபெற்று வருகிறது. கடலோர பாதுகாப்பு குழும போலீசார் 75 பேர் மூன்று ரோந்து படகுகளில் மன்னார் வளைகுடாவில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மன்னார் வளைகுடா பகுதி முழுவதும் ட்ரோன்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றார்..

# பிரதமர் வருகையை முன்னிட்டு ட்ரோன்களுக்கு தடை: தூத்துக்குடியில் 2100 போலீசார் பாதுகாப்பு

**திருச்செந்துார்,ஜூலை.26**

தூத்துக்குடியில் பிரதமர் மோடி நாளை (ஜூலை 26) வருவதை முன்னிட்டு ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. 2100 போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

மாலத்தீவில் இருந்து தூத்துக்குடி விமான நிலையத்துக்கு தனி விமானம் பிரதமர் மோடி வருகிற 26ஆம் தேதி இரவு 8 மணி அளவில் வருகிறார். தொடர்ந்து, சர்வதேச தரத்தில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள விமான நிலைய விரிவாக்கத்தை அவர் திறந்து வைப்பதுடன், ரூ.4,500 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இதையொட்டி பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு படை பிரிவான 'எஸ்பிஜி' குழுவின் ஏடிஜிபி சுரேஷ்குமார் தலைமையில் சுமார் 80 பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் தமிழக ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், தென்மண்டல ஐஜி பிரேமானந்த் சின்ஹா, நெல்லை சரக டிஐஜி பொறுப்பு சந்தோஷ் ஹாதிமணி ஆகியோர் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.எஸ்.பி.க்கள் தலைமையில் சுமார் 2100 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். விழா மேடையில் இருந்து மொத்தம் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மத்திய காவல் படையினருடன் இணைந்து தமிழக போலீசாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

ட்ரோன்களுக்கு தடை: முன்னதாக மாவட்டம் முழுவதும் வருகிற 27ஆம் தேதி காலை வரையில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் வெளிநாடுகளில் இருந்து வந்துள்ளவர்கள் குறித்த விவரங்கள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டுள்ளன. தங்கும் விடுதிகள், ஹோட்டல்கள் உள்ளிட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் சோதனை செய்யப்பட்டு வருகிறது. சந்தேக நபர்கள் குறித்தும் கடந்த 3 நாள்களாக விசாரிக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் தீவிர வாகனச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

# பிரதமர் மோடி வருகை தூத்துக்குடியில் போக்குவரத்து மாற்றம்: காவல்துறை அறிவிப்பு

**திருச்செந்தூர்,ஜூலை26-**

பாரத பிரதமர் தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு குறித்து மாவட்ட காவல்துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தூத்துக்குடி விமான நிலையம் புதுப்பிக்கப்பட்ட புதிய முனையம் திறப்பு விழாவிற்கு 26.07.2025 அன்று வருகை தரும் மாண்புமிகு பாரத பிரதமர் வருகையை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு சம்மந்தமான அறிவிப்புகள். நிகழ்ச்சி நடைபெறும் 26.07.2025 அன்று மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரையில் தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி மற்றும் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி செல்லும் எந்த ஒரு கனரக (Heavy Vehicle s) மற்றும் சரக்கு வாகனங்களும் செல்வதற்கு அனுமதி கிடையாது. குறிப்பாக வாகைகுளம் விமான நிலையத்தை கடந்து செல்வதற்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது.மேலும் தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி அல்லது ஸ்ரீவைகுண்டம் செல்லும் மற்ற வாகனங்கள் விமான நிலையத்தை கடந்து செல்ல முடியாத பட்சத்தில் அவைகள் மங்களகிரி விலக்கில் வலது புறமாக திரும்பி மேல கூட்டுடன் காடு, அல்லிகுளம், பேரூரணி, திம்மராஜபுரம், வர்த்தகரெட்டிபெட்டி, வாகைகுளம் ஜங்ஷன் வழியாக செல்லவும்.அதே போல் திருநெல்வேலி மற்றும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வரும் மற்ற வாகனங்கள் விமான நிலையத்தை கடந்து செல்ல முடியாத பட்சத்தில் அவைகள் வாகைகுளம் ஜங்ஷன், வர்த்தகரெட்டிபெட்டி, திம்மராஜபுரம், பேரூரணி, அல்லிகுளம், மேல கூட்டுடன்காடு, மங்களகிரி விலக்கு வழியாக செல்லவும்.நிகழ்ச்சி நடைபெறும் அன்று நிகழ்ச்சிக்கு வருகை தரும் மிகமுக்கிய நபர்களின் வாகனங்ளை தவிர மற்ற எந்த வாகனங்களுக்கும் விமான நிலையத்தின் உள்ளே செல்வதற்கு அனுமதி கிடையாது.மேலும் அன்றைய (26.07.2025) தேதியில் தூத்துக்குடி விமான நிலையத்தில் விமான பயணம் மேற்கொள்ளும் பயணிகள் பயண நேரத்திற்கு 3 மணி நேரத்திற்கு (Arrive 3 Hours early) முன்பாக விமான நிலையம் வருமாறு அறிவுறுத்தப்படுகிறது.Pass Holders வாகனங்கள் வாகைகுளம் Toll Gate அருகில் உள்ள வேலவன் நகர் வழியாக சென்று, Pass Holders-க்கான வாகன நிறுத்தத்தில் நிறுத்தவும். அதே போல் நிகழ்ச்சிக்கு வரும் பொதுமக்கள் வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து விமான நிலையம் செல்லும் மெயின் Entrance-ன் வலதுபுறம் (மேற்கு பகுதி) மற்றும் இடதுபுறம் (கிழக்கு பகுதி) ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்தங்களில் நிறுத்திவிட்டு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு செல்லவும். நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அனைவரும் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அனுமதிக்கப்படுவார்கள். எனவே பொதுமக்கள் அனைவரும் காவல்துறை சூழ்நிலைக்கேற்ப மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தகுந்த ஒத்துழைப்பு கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# கோவில்பட்டி நீதிமன்ற வளாகத்தில் புனரமைக்கப்பட்ட புதிய கட்டிடங்கள்: முதன்மை அமர்வு நீதிபதி வசந்தி திறந்து வைத்தார்



**கோவில்பட்டி ஜூலை 26**

கோவில்பட்டி நீதிமன்ற வளாகத்தில் புனரமைக்கப்பட்ட இரண்டு புதிய கட்டிடங்கள் திறப்பு விழா நடந்தது.

கோவில்பட்டி வழக்கறிஞர் சங்க தலைவர் ஜி.எம். சங்கர் கணேஷ் தலைமை வகித்தார். புதிய கட்டடத்தை மாவட்ட முதன்மை நீதிமன்ற நீதிபதி வசந்தி திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றினார். நிகழ்ச்சியில் சார்பு நீதிபதி மாரி காளை, முன்சீப் நீதிபதி கருப்பசாமி, குற்றவியல் நீதிமன்றம் எண் 1 நீதிபதி ஆனந்த், குற்றவியல் நீதிமன்றம் எண் 2 நீதிபதி மணிமேகலை, பார் கவுன்சிலிங் மெம்பர் மைக்கேல் ஸ்டாலின் பிரபு, வழக்கறிஞர் சங்கச் செயலாளர் ஜெயசீலன், துணைத் தலைவர் சிவன் பாண்டி, துணைச் செயலாளர் முனீஸ்வரி, பொருளாளர் ரேவதி, மூத்த வழக்கறிஞர்கள் போஸ், மணிகண்டன், ரங்கராஜன், ஆழ்வார் சாமி சிவகுமார், முத்துச்சாமி, ஆண்ரூஸ் சாம் ராஜ், ராதாகிருஷ்ணன், ராமகிருஷ்ணன், செல்வின் ராஜ் குமார், சந்திரசேகர், ராஜேஷ் சந்திரன், பாரதி, கார்த்திக், பெஞ்சமின், ராஜ்மோகன், உட்பட ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.


# கோவில்பட்டி முத்துமாரியம்மன் கோவிலில் கால் நாட்டு விழா சிறப்பு பூஜை



**கோவில்பட்டி ஜூலை 26**

கோவில்பட்டி கதிரேசன் ரோட்டில் உள்ள முத்துமாரியம்மன் கோவிலில் நாட்கால் நாட்டு சிறப்பு பூஜை நடைப்பெற்றது. இதனையொட்டி வெற்றி விநாயகர், முத்துமாரியம்மன், சந்தன கருப்பசாமிக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனை மற்றும் நாட்காலுக்கு சிறப்பு பூஜை நடைப்பெற்றது. பூஜைகளை சுப்ரமணிய சுவாமி செய்தார். இதில் சுற்று வட்டார மக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். ஏற்பாடுகளை கோவில் தலைவர் தங்கவேல் செயலார் மாரிச்சாமி பொருளாளர் லட்சுமனன் செய்தனர்.

# குற்றாலம் சாரல் திருவிழாவின் 5-வது நாள் விழாவில் கலை நிகழ்ச்சிகள்




தென்காசி ஜூலை.26:

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கத்தில் குற்றாலம் சாரல் திருவிழாவின் 5-வது நாள் திருவிழா மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சாரல்திருவிழாவின் 5 - வது நாள் திருவிழாவில் கலந்து கொண்ட கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், நினைவுப்பரிசுகளை வழங்கினார்.இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,ஐந்தாவது நாள் சாரல் திருவிழா நிகழ்ச்சியாக மகளிர் திட்டத்தின் சார்பில் கோலப் போட்டியும், சிவகிரி ஸ்டெல்லா மெட்ரிக்பள்ளி, பூலாங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளி, இலஞ்சி ஐ.சி.ஐ. தொடக்கப் பள்ளி, மாணவ, மாணவிகளின் பல்சுவை நிகழ்ச்சிகளும், கலை பண்பாட்டுத் துறை மற்றும் தென்னக பண்பாட்டு மையத்தின் சார்பில் பண்பொழி மாரியம்மாள் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும், சுற்றுலாத்துறையின் சார்பில் சென்னை வேம்பு கலைக் குழுவினரின் பல்சுவை நிகழ்ச்சியும், கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் சாத்தூர் முத்துமாரி குழுவினரின் கிராமிய கலைநிகழ்ச்சிகளும், கரிவலம்வந்தநல்லூர் விடிவெள்ளி குழுவினரின் மல்லர் கம்பம் நிகழ்ச்சியும், சுற்றுலாத்துறையின் சார்பில் சென்னை ஸ்ரீயமுனா நாட்டியாஞ்சலியினரின் பரதநாட்டியம் நிகழ்ச்சியும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநில கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், திருப்பத்தூரான் சேவியர் கலைக் குழுவினரின் நாட்டுப்புற பல்சுவை நிகழ்ச்சியும், சுற்றுலாத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் விஜய் டிவி சூப்பர் சிங்கர் புகழ் டெய்சி, களந்தை ஜெயராம் ஆகியோரின் நெல்லை ஆனந்தராகம் திரைப்பட மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் பரிசுகளை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரெஜினி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் எடிசன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) . ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

<u>நெல்லையில்</u>

# அதிமுக பிரமுகர் நினைவு தினம் அனுசரிப்பு



**நெல்லை,ஜூலை.26-**

மறைந்த பேட்டை அ.திமுக பிரமுகர் ரூரல் பஞ்சாயத்து முன்னாள் துணைத் தலைவர் பிச்சைராஜ் என்ற பிச்சுகுட்டி பாண்டியன் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி இன்று கடைபிடிக்கப்பட்டது

நெல்லை பேட்டை எம் ஜி ஆர் நகர் பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு ஏராளமானோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் தொடர்ந்து அப்பகுதியில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம், மற்றும் அன்னதானமும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை மண்டல பொறுப்பாளர் மாரிமுத்து, மண்டல தலைவர் ராஜசேகர் , திருநெல்வேலி மத்திய மாவட்ட இளைஞர் அணி செயலாளர் முத்துக்குமார், கார்த்திக், ஆகியோர் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அறக்கட்டளை நிறுவனர் இசக்கி ராஜா,பேட்டை ரூரல் ஊராட்சி தலைவர் சின்னதுரை,பேட்டை ரூரல் ஊராட்சி மன்ற உறுப்பினர் முருகன், அத்திமேடு திமுக நிர்வாகி தடா குமார், பா ஜ க பாரதி,பேரூர் கூட்டுறவு வங்கி தலைவர் தேவா, வழக்கறிஞர்கள் கரையிரப்பு ராஜா, ராஜபதி பிரகாஷ், செல்வம் ,மற்றும் எம் பி ஆர் குரூப் ஊழியர்கள், வி ஆர் சி கிளப் நிர்வாகிகள் மற்றும் அனைத்து கட்சி நிர்வாகிகள் உறவினர்கள் கலந்து கொண்டு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

<u>திருச்செந்தூரில்</u>

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்




**திருச்செந்தூர், ஜூலை 26:**

திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட 15, 16, 17 வார்டுகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் திருநாவுக்கரசர் திருமண மண்டபத்தில் வைத்து நடந்தது.

முகாமிற்கு திருச்செந்தூர் கோட்டாட்சியரும், முகாம் பொறுப்பு அலுவலருமான சுகுமாறன் தலைமை வகித்தார். தமிழக மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு முகாமினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் குறித்து ஆய்வு செய்ததுடன், பொதுமக்களிடமும் குறைகளைக் கேட்டறிந்தார்.

திருச்செந்தூர் வட்டாட்சியர் பாலசுந்தரம், நகர் மன்ற தலைவர் சிவஆனந்தி, துணைத்தலைவர் செங்குழி ரமேஷ், மாவட்ட அறங்காவலர் வாள் சுடலை, நகராட்சி ஆணையாளர் ஈழவேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் 15 துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டனர். குறிப்பாக கலைஞர் மகளிரி உரிமைத் தொகைக்கு ஏராளமான பெண்கள் விண்ணப்பித்தனர்.

நிகழ்ச்சியில் திருச்செந்தூர் நகர் மன்ற உறுப்பினர்கள் சோமசுந்தரி, ஆனந்தராமச்சந்திரன், சுதாகர், செந்தில்குமார், திமுக வர்த்தக அணி மாநில துணைச் செயலாளர் உமரிசங்கர், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ராமஜெயம், முன்னாள் அமைப்பாளர் எஸ்ஜே ஜெகன், தலைமை செயற்குழ உறுப்பினர் ஜெயக்குமார் ரூபன், ஒன்றிய அவைத்தலைவர் குழந்தைவேல், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அமலி சந்திரன், முருகன், நம்பிராஜன், சுரேஷ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சிவராசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சங்கரன்கோவிலில் சிப்காட் அமைக்கப்படும் இடம்: அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா ஆய்வு

## கலெக்டர் கமல்கிஷோர், ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



**சங்கரன்கோவில். ஜூலை.26.**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில் ரூபாய் 300 கோடி அளவில் முதலீடுகளை ஈர்த்து 3000 நபர்கள் வேலை வாய்ப்பு பெரும் வகையில் சுமார் 150 ஏக்கரில் சங்கரன்கோவில் தொகுதி சின்னகோவிலான்குளம் பகுதியில் சிப்காட் தொழில் பூங்கா அமைக்கப்படும் என சட்டமன்றத்தில் அரசு அறிவிக்கப்பட்டது.

சங்கரன்கோவில் பகுதியில் சிப்காட் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவிப்பு பொது மக்களிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில் சிப்காட் தொழில் பூங்கா அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தை தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டிஆர்பி ராஜா ஆய்வு செய்தார். முன்னதாக தூத்துக்குடி விமான நிலையம் வந்து அமைச்சருக்கு வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம் எல் ஏ தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது அதனை தொடர்ந்து ஆய்வு செய்ய வந்த அமைச்சர் ராஜாவிற்கு குருக்கள்பட்டியில் ஒன்றிய செயலாளர் பெரியதுரை தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அமைச்சர் டி ஆர் பி ராஜா

சங்கரன்கோவில் தொகுதியில் சிப்காட் அமைய உள்ள இடத்தை பார்வையிட்டார். தொடர்ந்து அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார். இந்த நிகழ்வின்போது தென்காசி மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச் செல்வி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,சீனிவாசன், பரமகுரு, மாவட்ட அவைத்தலைவர் சுப்பையா, ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், கடற்கரை, பொன்முத்தையாபாண்டியன், சேர்மத்துரை, கிறிஸ்டோபர், பால்ராஜ், வெள்ளத்துரை, அன்பரசு, ராமச்சந்திரன், நகர கழக செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி கிழக்கு அந்தோணிசாமி, மேற்கு நாகூர் கனி, தொமுச மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன், மின்வாரிய தொமுச திட்ட செயலாளர் மகாராஜன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி முகேஷ், வக்கீல் அணி பிச்சையா, தகவல் தொழில் நுட்ப அணி கிப்ட்சன், மாணவர் அணி உதயகுமார், துணை அமைப்பாளர்கள் தகவல் தொழில் நுட்ப அணி சிவசுப்பிரமணியன், ரஜினிகாந்த், மாணவரணி வீரமணி, ஜெயக்குமார், பாலாஜி ,கார்த்தி, மாரியப்பன்,மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# குற்றாலம் பராசக்தி கல்லூரியில் சாரல் திருவிழாவினை முன்னிட்டு கோல போட்டிகள்



தென்காசி ஜூலை.26:

தென்காசி மாவட்டம் குற்றாலம் பராசக்தி கல்லூரியில் சாரல் திருவிழாவினை முன்னிட்டு கோலப் போட்டிகள் நடைபெற்றது.

சாரல் திருவிழாவை முன்னிட்டு தென்காசி மாவட்டம் குற்றாலம் பராசக்தி கல்லூரியில் நடைபெற்ற கோலப் போட்டியில் 14 குழுவினர் கலந்து கொண்டனர்.

கோலங்கள் அனைத்தும் பார்வையாளர்களை கவரும் வண்ணம் இருந்தது. கோலப் போட்டியில் முதல் பரிசினை கடையம் வட்டாரம் வண்ணமயில் மகளிர் சுயஉதவி குழுவினரும், இரண்டாம் பரிசினை குருவிகுளம் வட்டாரம் ஸ்டார் மகளிர் சுய உதவி குழுவினரும், மூன்றாம் பரிசினை சங்கரன்கோவில் வட்டாரம் செம்பருத்தி மகளிர் சுயஉதவி குழுவினரும் பெற்றனர்.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செய்திருந்தனர்.

